மனித
# உரிமைகள் மீட்பு
மாதமிருமுறை இதழ்

உரிமை - 8 மீட்பு - 10 ஆகஸ்ட் 16 - 30 | 2023 விலை 20 / -


புன்னகையே அன்பின் சின்னம் அதுவே நாம் பிறருக்குக் கொடுக்கும் அழகிய பரிசு...

# உழைப்பால் உயர்ந்த சாதனையாளர் !

பட்டுக்கோட்டையில் ஒரு அருள் கொடை



## நாகர்கோவில் வடசேரி கனகமூலம் காய்கறி சந்தையில் மேயர் மகேஷ் அதிரடியாக புகுந்து வியாபாரிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்..!

# இரட்டை கொலை..!

நடவடிக்கை எடுக்காத காவல் துறை...

நீதி கிடைக்காததால் பட்டினி கிடந்து இறந்த தாய்..!






# உயர்திரு. APJ. அப்துல் கலாம் ஐயா அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி விழா!

சர்வதேச மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம் மற்றும் மனித உரிமைகள் மீட்பு மாத இருமுறை இதழ் சார்பாக திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி தாலுகா தும்பேறி கூட்ரோட்டில் உயர்திரு APJ. அப்துல் கலாம் ஐயா அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி விழா மிகச் சிறப்பாக நடைபெற்று, 300 மரக்கன்றுகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

விழாவினை ஏற்பாடு செய்தவர்கள் திரு.G வெங்கடேசன் தேசிய தலைவர், விழாவினை சிறப்பித்தவர்கள், M.ராமச்சந்திரன், சர்வதேச ஒருங்கிணைப்பாளர் திரு.VG.வெங்கட், மாநில சட்ட ஆலோசகர், P. உதயகுமார் தேசிய ஒருங்கிணைப்பாளர், D.ராஜீவ் காந்தி மாநில துணை அமைப்பு செயலாளர், N. ஜெய்கணேஷ் வேலூர் கிழக்கு மாவட்ட செயலாளர் ஆகியோர்கள் விழாவினை கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

- உதவி ஆசிரியர் D. ராஜிவ் காந்தி



# மனித உரிமைகள் மீட்பு

## (மாத இருமுறை இதழ்)

வெளியீட்டாளர்: M. அப்துல்ரகுமான்

உரிமை-8 மீட்பு-10 ஆகஸ்ட் 16-30 | 2023



**ஆசிரியர்:** நீலகிரி K. மதுசூதனன்.
**இணை ஆசிரியர்:** புதுவை K. ராஜாராம்குமார்.
**தொகுப்பு ஆசிரியர்:** வேலூர் M. ராமச்சந்திரன்.
**சிறப்பு உதவி ஆசிரியர்:** தேனி AR. நாசர்கான்.
**சிறப்பு துணை ஆசிரியர்:** நாகர்கோயில் Dr. S முகம்மது அலி,
**சிறப்பு செய்தி ஆசிரியர்:** வாணியம்பாடி G. வெங்கடேசன்.
**பொறுப்பு ஆசிரியர்:** பெரம்பலூர் M. இளவரசன்.
**தலைமை செய்தி ஆசிரியர்:** நாகர்கோயில் C.J. சுதர்மன்.
**கௌரவ ஆசிரியர்:** கிருஷ்ணகிரி Dr. குமரவேல்.
**தலைமை ஆசிரியர்கள்:** Dr. முகம்மது காசிம், Dr. K. கலைச்செல்வன்.
**முதன்மை ஆசிரியர்கள்:** பரமகுடி S. பதர்னிஷாபேகம், R.M நந்தினி, T. அரவிந்தன், Dr. P. முருகேசன், கேரளா P.K. பிரதிஷ், SGM. ரமேஷ்.

**நிர்வாக ஆசிரியர்கள்:**
Dr M. ஹரிகிருஷ்ணன், M. காதர் முகைதீன்.

**கௌரவ இணை ஆசிரியர்கள்:** R. அகிலேஷ், A. கேம்ராஜ் N. அன்பழகன், A. பிரபாகரன், S.A. சையதுமுகைதீன் ஆலிம், S. லோக சுந்தரம், A.விஜி, R. ரத்தீஷ், C.சதிஷ்.

**கௌரவ செய்தி ஆசிரியர்கள்:**
M. ஞானசேகர், R. சந்திரபோஸ்.

**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:** S. ரமேஷ், R. சாம் எட்வர்ட்.

**செய்தி ஆசிரியர்கள்:**
R. M. பரமகுடி ராமச்சந்திரன், புதுவை S செல்வமணி.

**கௌரவ இணை ஆசிரியர்:** A.R. பத்மநாதன், RNS. வெங்கடேஷ்வரா

**முதன்மை துணை ஆசிரியர்கள்:** M. தனராஜ், M. லோகேஷ்.

**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:**
D. கென்னடி, L.S. மனோகரன், S. தினேஷ்ராஜ், M. இளங்கோவன்.

**தலைமை இணை ஆசிரியர்கள்:**
G. திருச்செந்தில்வேல், T. செந்தில்குமார், ST ஜோசப், K. சதீசன்.

**தலைமை கௌரவ ஆசிரியர்கள்:**
M. கார்த்திக், A. ஷபீக் ரகுமான்.

**தொகுப்பு இணை ஆசிரியர்கள்:**
M. விஜயகுமார், S.B. ரவிக்குமார்.

**தொகுப்பு துணை ஆசிரியர்கள்:**
C. பெருமாள், J. கோவிந்தராஜ், C. அய்யாவு.

**துணை ஆசிரியர்கள்:**
D.சுரேஷ்குமார், G.சுரேஷ்.

**கௌரவ துணை ஆசிரியர்கள்:**
P. சதீஷ், G. அருள்செல்வன், D. கோபிநாத்,
P. உதயகுமார், A.T. அஷ்ரப், S. ரவிக்குமார், M. ஜெய்பிரசாத்

**உதவி ஆசிரியர் குழு:**
K. நமச்சிவாயம், S. சரவணன், M.S. ஆரோக்கியசாமி,
M. விஜயேந்திரன். K. தம்புசாமி, முசா(எ)சாகுல் ஹமீது, Dr. ஸ்டேன்லி மோசஸ், Dr. L. ரமேஷ், A.S. அருண்குமார், A. முஜிபுர் ரகுமான், M. மாலா, M. ஆனந்தராஜ், AMS. ஹம்சத்அலி, R. சுப்பு, D. ராஜீவ்காந்தி, S. முரளிதரன், T. சுதாகர், S. கலாநிதி, G. கலையரசன், M. நாகராஜ், கிஷோர் குமார், ஜெயின் சன்சா, R.மலர்கொடி, RD ராம்குமார், A. ஆரோக்கியசாமி.

**நிருபர்கள்:**
M. தயாநிதி, S. சுல்தான்அலாவுதீன், M.சுரேஷ்குமார், M. செய்யது சகாபுதீன், S. சீனிவாசன், S. கிருஷ்ணன், P. வேல்முருகன், A. பார்த்திபன், S. சுரேஷ், S. சுப்ரமணி, லாசரஸ் கோவல், D. வில்வநாதன், G. ஜாபர் அலி, Dr.A. அருள்சாமி, V. முத்துகுமரேசன், S. சுந்தரமூர்த்தி, C. பிரபாசிங், M.J. சீனிவாசன், B. செல்வமணி, Dr. முஸ்தபா, S. லோகநாதன், A. முகமது தௌபிக், M. ஈஸ்வரி, V. ராஜாமுகமது, I. இப்ராஹிம், S.S. சஹாபுதீன், A. முகமது இதிரீஸ், R. ஜெயாகிருஷ்ணன், K. ரஜமோனி, A. விஜயசிங்கம், G. குமரேசன், M. அஹமத்முஸ்தபா ஆலிம், M. தமிழ்செல்வன், Y. முபாரக், ரியாஸ் அகமது, R. முகமது ஷெரீப், முஜிபூர்ரகுமான், S. சசிகுமார், R. ரவி, A. அமிர்தவேல், Y. மைதின் ஷசா, V. செல்வராஜ், S. சபாபதி, Dr. டார்வின் ஜான், ஜெயசுனிதா, R. சுதாகர், A. செல்வராஜ், C. அய்யாவு, K. சின்னராஜா, N. சுரேஷ், Y. முபாரக் அலி, S. ரியால் அகமது, M. கோவிந்தராசு, முரளி (எ) பிரேம்குமார், S. பாலமுருகன், S. தென்னரசு, Dr. ஜான் டைட்டஸ் இம்மானுவேல், R. பிரஸ்டன்ட், R. டேனியல், சத்திய நாராயணன், இர்பான், W. பீட்டர், கார்த்திகேயன், சரவணன், ஜான் மார்க், கோபாலகிருஷ்ணன், B. புஷ்பலதா, C. பெருமாள், K.A. செல்வராஜ், K. குணசேகரன், M. கலந்தர் முகைதின், S. சுந்தரமூர்த்தி, M. சுரேஷ், P. சிவகாமி, உபகாரம், ஆறுமுகம், A. பாலசுப்பரமணியன், தாமரைகனி, K. மணிகண்டன், M. பாலமுருகன், R. நாகராஜன், வேலுச்சாமி, K.S.சசிகுமார், L. ராஜகணபதி, A. ஜாபீர், M.மனோஜ், S. வெங்கடேஷ்குமார், G.ஜெயபிரகாஷ், S.ரபி, N.ஜெய்கணேஷ், M.ராஜா, M.தயாளன், K. விஜயகுமார், P. கிரேசி எலிசபத்மேரி, A.சக்திவேலு, V.சக்திவேல், D.சிவப்பிரகாசம், R.விவேக்கமல், K.ராஜா, H. ஹாஜா மைதின், R. ஜீவனந்தம், S. ஜான்சன், T. ஜெயசந்திரன்

**சட்ட ஆலோசகர்கள்:**
R. சிவக்குமார் BA BL (மதுரை),
R. சீதா BA BL (பட்டுக்கோட்டை), C. பாலாஜி BA BL (திருச்சி),
M. ஞானசேகரன் BA BL (பொன்னமராவதி),
K. கேசவமூர்த்தி BA BL (தஞ்சாவூர்),
R. S. ராஜேந்திரன் BA LLB (வேதாரண்யம்),
C. முருகன் BA BL (நாகப்பட்டினம்),
D.G. தினகரன் BA LLB (கிருஷ்ணகிரி),
S. மோகன் காந்தி BA BL (ஓசூர்).

**புகைப்பட நிருபர்கள்:**
AMS. சல்மான் அஹமது, A. குர்சித் ஆலம் கான், R. ரவி, V. வித்யாவீரப்பன், M. அருண், Dr.R. செல்வராணி. K. ஷக்கீனா சொர்ணலதா, மதிவிழி.



**இந்த இதழ் குறித்த அனைத்து தொடர்புகளுக்கும் முகவரி:**
ஆசிரியர்,
**மனித உரிமைகள் மீட்பு (மாத இருமுறை இதழ்)**
எண்:2/115D1, ஆன்டாஞ்சிரா, கொன்னச்சால் Po,
எருமாடு, பந்தலூர் தாலுக்கா, நீலகிரி மாவட்டம்,
தமிழ்நாடு-643239. செல்: 9543410000
Mail: manithurimaigalmeetpu@gmail.com
http://internationalhumanrightswatch.org


"மனித உரிமைகள் மீட்பு" இப்பொழுது ஆன்லைன் செய்திகளாய் உலகமெங்கும். https://youtube.com/@manithaurimaigalmeetpu5936 என்ற Youtube மூலமாக காணலாம் மற்றும் சமூக வலைத்தளத்தில் பகிரலாம்.

எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உயர்நீதிமன்றத்தின் வரம்புக்கு மட்டுமே உட்பட்டவை. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு மனித உரிமைகள் மீட்பு இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் சிறப்பு கட்டுரையாளர்கள் இன் கருத்துகள் அவர்களின் சொந்த கருத்துகளே.

### முக்கிய அறிவிப்பு

**மனித உரிமைகள் மீட்பு பத்திரிக்கை சங்கங்கள் இல்லை. மனித உரிமைகள் மீட்பு என்பது இந்திய பத்திரிக்கை துறையில் RNI பதிவு பெற்ற பத்திரிகையாகும். சில நபர்கள் மனித உரிமைகள் என்ற பெயரில் அமைப்புகள் மற்றும் சங்கங்கள் போன்று செயல்பட்டால் பத்திரிக்கை நிர்வாகம் பொறுப்பேற்காது.**

**இப்படிக்கு**
**-ஆசிரியர்**





# உழைப்பால் உயர்ந்த சாதனையாளர்

# பட்டுக்கோட்டையில் ஒரு அருள் கொடை

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்றான் வள்ளுவன். வள்ளுவனின் குறலுக்கு எடுத்துக்காட்டாய் தன் உடல், பொருள், ஆவி முழுவதையும் பிறருக்கு உதவுவதிலேயே செலவிட்டு வருகிறார் என்று கேள்வி பட்டு எமது ஆசிரியர் சூழவை தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை தாலுக்கா வீர குறிச்சி

எளிமை, நேர்மை,
உண்மை, சமத்துவம்,
சகோதரத்துவம்.

# பட்டுக்கோட்டை ஒரு கொடை வள்ளல்

**கிராமத்தில் உழைப்பே உயர்வு என்ற நிறுவனத்தின் நிறுவன தலைவரான திரு.S.அருள் சூசை அவர் ஏழை மக்களுக்கு உதவி செய்வது சம்மந்தமாக பட்டுக்கோட்டை வட்டார கிராம மக்களிடம் நமது நிருபர் கேட்ட போது, ஏழைமக்கள் கண்ணீர் மல்க கூறினார்கள்.**

*நம் அனைவருக்கும் கிடைத்தது ஒரே ஒரு வாழ்க்கை அதை நமக்காக வாழ வேண்டும் என்பார்கள், ஆனால் தனக்குக் கிடைத்த ஒரே ஒரு, வாழ்க்கையையும் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து வருபவர் தான் அருள் சூசைய் அவர்கள் . படைதிரட்டி இந்த உலகை வெல்ல முயன்றவர் பலர் ஆனால் தன் பாசத்தாலேயே எங்களை வென்றவர் தான் அருள் சூசைய்.*



மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தில் சர்வதேச ஒருங்கிணைப்பாளர் வேலூர் M. ராமச்சந்திரனிடம் கேட்ட போது...

பட்டுக்கோட்டையில் ஒரு அருள் சூசையைப்போல் ஒவ்வொரு ஊரிலும் ஒருவர் இருந்தால் இந்தியாவில் வறுமை கோட்டை கட்டுப்படுத்த முடிந்திருக்கும் என்று தெரிவித்தார்.



பெங்களூர் ஒசூர் திருசபையின் பிஷப் Rev.ஆரோக்கியசாமி அவர்களிடம் திரு.அருள் சூசை அவர்களை பற்றி கருத்து கேட்ட போது...

திரு. அருள் சூசை அவர் களின் சமூக சேவையை நாங்கள் ஆதரிக்கிறோம். எல்லாம் வல்ல இயேசு ஆண்டவர் அவருக்கு நீண்ட ஆயுளையும் ஆசிர்வாதத் தையும் வழங்க வேண்டுமென நாங்களும் மண்றாடி வேண்டிக் கொள்கிறோம்.



இது குறித்து தமிழ் மாநில கம்யூனிஸ்டு கட்சியின் பொதுசெயலாளர் K. மதுசூதனனிடம் கருத்து கேட்ட போது...

வாழும் வள்ளல் ஐயா அருள் சூசை அவரை பொறுத்தவரை ஆதரவற்ற ஏழை எளியோருக்கு உதவுவது என்பது அவரது தலையாய கடமையை போலவே எடுத்துக்கொள்வது ஆச்சரியபட வைக்கிறது ஊனமுற்றவர்களும் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் உள்ளபடியே மனம் நெகிழ வைக்கிறது.

அவர் எல்லா வளங்களும் பெற்று நீடுடி வாழ மனமாற வாழ்துவதாக தெரிவித்தார்.



# கருணை என்பது கஷ்டப்படாத மனித குணம்



M. மீர் காசிம் ஸமதானி M.A. அரபிக் கல்லூரி தக்களை பேராசிரியர் அவர்களிடம் கேட்ட போது...



எல்லாருக்கும் வணக்கம்,

ஒரு மனிதனுக்கு நாம் கருணை காட்டுவது என்பது உலகத்தில் எல்லா மக்களுக்கும் கருணை காட்டுவதற்கு சமம் யார் ஒரு மனிதனை வாழ வைக்கிறாரோ உலகில் உள்ள அனைத்து மக்களையும் வாழ வைக்கிறார்கள் என்பது பொருள் அதன் அடிப்படையில் கஷ்டப்படுபவர்கள் துன்பப்படுபவர்கள் ஆகியோருக்கு நாம் உதவி கரங்கள் நீட்ட வேண்டும். இதன் அடிப்படையில் ஏழை மக்களுக்கு உதவி செய்யும் அருள் சூசை அவர்களின் நல்ல குணங்களுக்காக எங்கள் நாகர்கோவில் தக்களை அரபிக் கல்லூரியில் மாணவர்களுடன் சேர்ந்து நாங்கள் பிரார்த்தனை செய்கிறோம்.

ஓம் போகர் ஜோதிஷ பயிற்சி கேகே மண்டபம் துரோபதியம்மன் கோவில் தெரு பட்டுக்கோட்டை C. நாடிமுத்து அவர்களிடம் கேட்டபோது...



வணக்கம், இளம் தொழிலதிபர் அருள் சூசை ஐயா அவர்கள் வாழ்க வளமுடன், பேரன்புடைய வள்ளுவர் வாக்காக வாழ்த்துகிறேன். தஞ்சை மாவட்டத்தில் பிறந்துஇளம் தொழிலதிபராக உலா வருவது பெருமை அளிக்கிறது. ஐயா அவர்கள் டிரஸ்ட் ஆரம்பித்து கிராமம் கிராமமாக சென்று படிப்பறிவு இல்லாதவர்களுக்கும், படித்த ஏழை குடும்பத்தினருக்கும் தன்னுடைய ஐஏஎஸ் அகாடமி சார்பாக பயிற்சி அளிக்க உள்ளார். இதனை அனைவரும் வாழ்த்த கடமைப்பட்டுள்ளோம், எத்தனையோ தொழிலதிபர்கள் இருந்தும் அவர்கள் மன அளவில் ஏழைகளாக இருப்பதால், நமது ஐயா அவர்கள் பரந்த மனநிலையுடன் இருப்பதால் எல்லாருக்கும் உதவி செய்து வருகிறார். இதுபோல் இந்த பிரபஞ்சத்தில் இந்த லோகத்தில் அவர் ஒவ்வொரு குடும்பத்தில் வாழ்வார் என்று நாம் அனைவரும் வாழ்த்துவோம். எதிர்காலத்தில் புத்தர் போலவும் வள்ளலார் போலவும் ஆன்மீகத்தையும் அளித்து உதவி செய்ய வேண்டும் என மனமாற வாழ்த்துகிறேன்.

இது சம்பந்தமாக சுன்னத் ஜமாத்தின் மாநிலத் தலைவர் நாகூர் செய்யது முகைதின் சாஹிப் ஆலிம்மிடம் கேட்டபோது தற்போது பொதுமக்களுக்கு உதவி செய்யும் பரந்த எண்ணங்கள் கொண்ட மனிதர்கள் குறைந்துவிட்டனர் ஆனால், அருள் சூசை போன்ற மனிதர்கள் இன்னும் மக்களுக்கு உதவி செய்து நூறு வயது வரை வாழ வேண்டும் என்று அல்லாஹ்விடம் துவா கேட்கிறேன்.





**அனைத்து ஏழை மாணவ, மாணவிகளுக்கு IAS அகடாமி துவக்க இருக்கிறார்.**

படிப்பு, மருத்துவம் ஆகியவற்றிக்கு முக்கியதுவம் தந்து சமுதாயத்தில் பொருளாதாரரீதியில் மிகவும் நலிவுற்றவர்களை அடையாளம் கண்டுகொண்டு தகுதியானவர்களுக்கு முக்கியதுவம் கொடுத்து நூற்றுக்கணக்கான மாணவ, மாணவிகளுக்கு கல்வி பயில தன் செந்த முயற்சியில் எந்தவிதமான விளம்பரமும் விரும்பாமல் மகத்தான சேவையை ஆற்றிவருகிறார்.

அது போலவே மருந்துவ உதவி கேட்டுவருபவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்துள்ளார் என்பது குறிப்பிடதக்கது

தற்போது புதிய திட்டமாக ஊனமுற்றவர்களுக்கு அவர்களின் மருத்துவ மற்றும் அத்யாவசிய செலவுகளுக்காக மாதா மாதம் உதவிதொகை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார்.

உண்மையாகவே தனது சொந்த உழைப்பால் எந்தவித பின்புலமும் இல்லாமல் வெளிநாட்டில் தொழில் தொடங்கி அதில் வரும் வருவாயில் ஏழைகளின் கண்ணீர் துடைக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடனும் குறிக்கோளுடனும் செயல்பட்டு வருவது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இதுபோன்ற தன்னலமற்ற கருணை உள்ளம் கொண்டவர்களை அடையாளம் கண்டு அவர்கள் விரும்பாவிட்டாலும் அவர்களின் சேவையை போற்றி வெளி உலகுக்கு தெரியப்படுத்துவது நம்முடைய கடமையாகும்.

பணம் இருந்தால் குணம் இருக்காது என்ற பழமொழியை உடைத்து இரண்டும் ஒன்று சேர பெற்று கருணையில் ஏசுநாதரை போலவே வாழும் தெய்வமாக இருப்பவரை நாமும் வாழ்த்தி வணங்குவோம்.

- ஆசிரியர் நீலகிரி K. மதுசூதனன்.

# ஒருவனை ஏமாற்ற வேண்டுமென்றால் அவனது ஆசையை தூண்டவேண்டும்...




ஒருவனை ஏமாற்ற வேண்டுமென்றால் அவனது ஆசையை தூண்டவேண்டும் என்னும் தத்துவத்தை சரியாக செய்துள்ளார்.

அப்படி தான் கோவையின் சித்ரா விமான நிலையத்திற்கு எதிர்புரம் CIT கல்லுரிக்கு அருகாமையில் உள்ள சுமார் 22 ஏக்கர் நிலம் 1985ல் அரசு ஊழியர்களுக்கு வீட்டுமனை கட்ட ஒதுக்கப்பட்டதாகவும் அதன் பிறகு அந்த இடம் சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு இடப்பட்டு தற்போது அங்கு யார் யார் பெயரில் நிலம் இருந்ததோ அவர்களுக்கு சாதகமாக நீதிமன்றதீர்ப்பு ஆனபடியால் யார்யார் பெயரில் நிலம் இருந்ததோ அவர்களில் பெரும்பாலானவர்கள் இறந்துவிட்ட நிலையில் அவர்களது வாரிசுதாரர்கள் என போலியான ஆவணங்களை தயாரித்து

## மோசடி மன்னன் விமல்

**கோவை மாவட்டம் ராமநாதபுரம் பகுதியில் வசிக்கும் விமல் என்பவர் மோசடியாக ரியல் எஸ்டேட் என்ற பெயரில் அப்பாவி மக்களை புதுவிதமாக ஏமாற்றும் நோக்கில் வீட்டுமனைகள் விற்பனைக்கு இருப்பதாக ஏஜென்டுகளிடம் ஆசை வார்த்தை கூறி போலியாக ஆவணங்களை தயார் செய்து நில விற்பனை என்ற பெயரில் மிக பெரிய மோசடி செய்து பல கோடிகளை சுருட்டியுள்ளது தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.**

இதில் புதுமை என்ன வென்றால் அவர் கையாண்ட விதம் யாரும் இதற்க்கு முன் செய்யாத புதிய உத்தியாக இருக்கிறது.

உங்களுக்கெல்லாம் கிரயம் செய்து தருகிறேன் என்று கூறி பல கோடிகள் சந்தை மதிப்புள்ள இடத்தை தலா ஒரு வீட்டுமனைக்கு சில லட்சங்கள் பணம் தருபவர்களுக்கு நீதிமன்றத்தின் மூலமாகவே கிரயம் செய்து தருவதாக ஆசைவார்த்தை கூறி அப்பாவி மக்களை ஏமாற்றியது தெரியவந்தது.

இந்நிலையில் மோசடி மன்னன் விமலின் ஏஜென்டாக இருந்த கோவை சரவணம்பட்டி ஜனதா நகரை சேர்ந்த ராணி என்பவர்

சவணம்பட்டி பகுதியில் வசித்து வந்த மல்லிகா என்பவரை அனுகி சம்பந்தபட்ட நிலம் தற்போது நீதிமன்ற வழக்கு முடிந்த நிலையில் வாரிசுதாரர் களால் யாருக்கு வேண்டுமானாலும் விற்பனை செய்யலாம் தற்போதுள்ள மார்கட் விலையை விட பல மடங்கு குறைவாக வாங்கி தருவதாக ஆசைவார்தை சொன்னதன் பேரில் மேலே சொன்ன முழு விபரங்களையும் அறியாமல் தனக்கும் தனக்கு தெரிந்த 9 நபர்களுக்கும் சேர்த்து பலதவணைகளாகரொக்கமாக பணம் கொடுத்துள்ளார்.

ராணி என்பவர் த ஒருபோதும் துரோ செய்யமாட்டார் நம்பிக்கையில் மோசடி மன்னன் விமலிடம் பணம் கொடுத்ததை தொடர்ந்து





நிலத்தை கிரயம் செய்து தருமாறு கேட்ட போது பல காரணங்கள் கூறி காலம் தாழ்த்தி வந்துள்ளார்.

அதன் பிறகு அவர்களது நடவடிக்கையில் சந்தேகம் அடைந்த மல்லிகா அவர்கள் இது குறித்து வெளியே விசாரித்தபோதுதான் தானும் தன்னை நம்பி பணம் கொடுத்தவர்களும் நன்றாக ஏமாற்ற பட்டிருப்பது தெரியவந்தது.

இது குறித்து பாதிக்கப்பட்ட மல்லிகா அவர்கள் சம்பந்தபட்ட விமலிடமும் ராணியிடமும் தானக்கு கிரயம் செய்ய ஒதுக்கிய நிலத்தை கிரயம் செய்து தருமாறு கேட்டபோது சாக்குபோக்கு சொல்லி ஏமாற்றி வந்துள்ளனர்.

மீண்டும் மீண்டும் வற்புறுத்தி கேட்டபோது விமல் அவர்கள் தான் நிலமோசடி செய்வதற்காக திட்டமிட்டே இப்படி செய்ததாகவும் மீறி இதுசம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை எடுத்தால் என்ன வேண்டுமானாலும் செய்வேன் எனவும் இந்த மோசடியில் உங்களை எல்லாம் மாட்ட த்து விடுவதாகவும் மிரட்டி வருகிறார்.

மேலும் இவரை (விமல்) பற்றி விசாரித்த போதுதான் இது போல பல நில மோசடிகளும் செய்து பல கோடிகள் சுருட்டியிருப்பது தெரியவந்துள்ளது.

எனவே இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் இருக்கவும் அப்பாவிகளை யாருடைய நிலத்தையும் காண்பித்து ஏமாற்றாமல் இருக்கவும் பாதிக்கப்பட்டு ஏமாந்தவர்களின் பணத்தை திரும்ப பெற்றுதரவும் இதற்க்கு உடந்தையா இருந்த அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் மேற்கண்ட நிலத்தை ஆய்வு செய்து போலியாக பத்திரபதிவு செய்தி□ந்தால் பத்திரபதிவு செல்லாது என அறிவித்து விமலிடம் இதன்மூலம் பெற்ற பணத்தை பறிமுதல் செய்யபடவேண்டுமெனவும் தமிழக காவல்துறை அதிகாரிகளுக்கு பாதிக்கப்பட்டவர்களின் சார்பாக கோரிக்கை விடுக்கப்படுகிறது.

- இணை ஆசிரியர் புதுவை K. ராஜாராம் குமார்




# இரட்டை கொலை!

## ஒரு தரப்புக்கு ஆதரவாக செயல்பட்டு வரும்

# ஒரத்தநாடு போலீசார்



பிரபு

**இது சம்பந்தமாக கொலை செய்யப்பட்ட பிரபுவின் சகோதரர் K. போஸ் அவர்களிடம் கேட்டபோது...**

**நான் இந்து பறையன் சமூகத்தை சேர்ந்தவன். எனக்கு ஒரு சகோதரன் உள்ளார்.**

எனது சகோதரன் பிரபு என்பவர் கடந்த 04.05.2023 அன்று இரவு ஹரி, சிவசூர்யா விஷ்வா ஆகியோர் திருச்சி ஏர்போர்ட்டில் வேலை உள்ளது என கூறி ஒரத்தநாட்டில் இருந்து கடத்தி கொண்டு போய் என் தம்பியையும் அவருடன் இருந்த ஸ்டாலின் என்பவரையும் கொலை செய்து எனது தம்பின் உடலை திருச்சி மாவட்டம் துறையூர் வட்டம், துறையூர் To முசிறி செல்லும் மெயின் ரோட்டில் உள்ள கொல்லபட்டி, குண்டாறு ஆற்று பாலத்திற்கு அடியில் எனது தம்பியின் உடலை வீசி சென்றுள்ளனர்.

எனது தம்பியுடன் இருந்த ஸ்டாலின் என்பவரின் உடலை திருச்சி மாவட்டம் துறையூர் வட்டம், துறையூர் To முசிறி; ரோட்டில் உள்ள பொன்னுசங்கம்பட்டி கிராமம் இராயன் ஏரிவடிகால் வாய்கால் வழியில் உடலை வீசி சென்றுள்ளனர்.

எனது தம்பின் உடலை கண்ட கலிங்கமுடையான்பட்டி கொல்லபட்டி (பொறுப்பு) கிராம நிர்வாக அலுவலர் ராஜகணபதி என்பவர் புகார் கொடுத்து அது துறையூர் காவல்நிலையத்தில் குற்ற எண்.175/2023 என்றும், என் தம்பியுடன்

இருந்த ஸ்டாலின் என்பவரின் உடலை கண்ட பொன்னுசங்கம்பட்டி கிராம நிர்வாக அலுவலர் உமாவதி என்பவர் புகார் கொடுத்து அது ஜெம்புநாதபுரம் காவல் நிலையத்தில் குற்ற எண். 108/2023 என்ற எண்ணிலும் இ.த.ச பிரிவு 302ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

இந்த வழக்கை என் தம்பியின் உடலை கைப்பற்றி புலன் விசாரனை செய்த விசாரனை அதிகாரி வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகளில் விஷ்வா என்பவர் BC பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர் எனவும், இந்த கொலைக்கான நோக்கம் சாதிரீதியாக உள்ளது எனவும் அறிக்கை அளித்துள்ளார். விசாரணை அதிகாரி குற்ற சம்பவத்தின் முதல் தகவல் அறிக்கை மற்றும் புலன் விசாரனை அறிக்கையும் ஒரத்தநாடு காவல் நிலையத்திற்கு உரிய வழி மூலம் தபாலில் அனுப்பியுள்ளார். மேலும் விஷ்வா என்பவர் பெயரிலும் மற்ற எதிரிகள் பெயரிலும் அளவுக்கு அதிகமாக



பிரபு தாயார் கங்கையம்மாள் மகனின் இறப்பு துக்கம் தாங்காமல் காவல்துறையால் நியாயம் கிடைக்கவில்லை என்பதால் சோகத்தில் கடந்த வாரம் இறந்துவிட்டார்

பண பரிவர்த்தனை நடந்துள்ளது.

ஒரத்தநாடு போலீசார் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு வழக்கின் முக்கிய குற்றவாளியான விஷ்வா மீது வன்கொடுமை தடுப்பு சட்ட பிரிவுகளில் (PCR) வழக்கு பதிவு செய்து புலன் விசாரனை செய்யாமல் ஒரு தரப்புக்கு ஆதராவாக செயல்பட்டு வருகின்றனர்.

ஒரத்தநாடு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் இந்த வழக்கின் முக்கிய குற்றவாளிகள் குறித்து வன்கொடுமை தடுப்பு சட்ட பிரிவுகளில் (PCR) வழக்கு பதிவு செய்து மேல் விசாரனை செய்யாமல் அலட்சியம் காட்டி வருகிற்.

வழக்கில் தொடர்புடைய எதிரிகள் இரட்டை கொலை செய்துள்ளனர் மூன்று நபர்கள் இரண்டு நபர்களை கொலை செய்ய இயலாது . மேலும் பல நபர்கள் கொலைக்கு



ஸ்டாலின்



இது சம்பந்தமாக வளரும் தமிழக கட்சியின் மாநில கொள்கை பரப்பு செயலாளர் ஜெ. விவேகானந்தன் இடம் கேட்டபோது...

இக்கொலையில் மூவர் குற்றம் சாட்டப் பட்டிருக்கிறார்கள் பிறகுமூவரும் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள்தவிர இன்னும் சதி திட்டத்தில் மற்றும் பலர் இருக்கிறார்கள்மேலும் இறந்து போனவர்கள் இரண்டு நபர்களும் தாழ்த்தப்பட்ட இனத்தை சேர்ந்தவர்கள் கொலை செய்தவர்கள் இதை இனத்த சேர்ந்தவர் தான் ஆனால் ஒருவர் மற்றும் பிற்படுத்த இனத்தை சேர்ந்தவர் ஆனால் ஒரத்தநாடு காவல்துறையினர் இந்த வழக்கை வன்கொடுமை வழக்காக பதிவு செய்யாதது ஏன்பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை நிவாரண உதவி செய்யாதது ஏன் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எங்களுடைய கட்சியின் சார்பாக போராட்டம் நடத்தி CB CID காவல்துறையினர் விசாரணை நடத்தி மேலும் குற்றவாளிகளை கைது செய்து வன்கொடுமை சட்டத்தில் இந்த வழக்கை மாற்ற வேண்டும் இறந்து போன பிரபுவின் தாயாருக்கு இரங்கல் தெரிவித்துக் கொள்கிறேன் என்று முடித்துக் கொண்டார்.

உடந்தையாக உள்ளனர். இவை குறித்து ஒரத்தநாடு காவல் நிலைய ஆய்வாளர் புலன் விசாரணை அதிகாரி சரிவர புலன்விசாரணை செய்யாமல் வழக்கை முடிக்க பார்க்கிறார்.

எனவே மேற்படி கொலை வழக்குகளை வன்கொடுமை தடுப்பு சட்ட பிரிவுகளின் கீழ் சட்ட பிரிவை மாற்றி புலன் விசாரணை செய்திட உத்தரவிடவும்; ஒரத்தநாடு காவல் துணை கண்காணிப்பாளர் தவிர வேறு காவல் துணை கண்காணிப்பாளரை வைத்து விசாரணை செய்ய உத்திரவிடவும் கண்ணீர் மல்க வேண்டுகோள் விடுத்தார்.

- சிறப்பு உதவி ஆசிரியர் AR. நாசர்கான்




பட்டுக்கோட்டை நகராட்சியில் பெரிய கடைத்தெருவில் இயங்கிவரும் ராம்கோ பட்டு சென்டர் என்னும் (ஜவுளிக்கடை) சட்டத்திற்கு புறம்பாக பாதசாரிகள் செல்லும் வழியிலும் போக்குவரத்து சாலையிலும், சரக்குகளை தள்ளுவண்டியில் வைத்து தள்ளி வருகிறார்கள்.

வழி நெடுகிலும் வண்டியை நிறுத்தி வைத்து விடுகிறார்கள். இதனால் மேற்படி சாலை குண்டும், குழியுமாக பழுது ஆகியுள்ளது. இதனால் பாதசாரிகளுக்கும், போக்குவரத்துக்கும் இடையூராக இருக்கின்றது. இந்த பிரதான சாலை பட்டுக்கோட்டை நகராட்சியில் மிகவும் முக்கியமான சாலையாகும். எப்பொழுதும் மக்கள் வெள்ளம் போல் காட்சியாளிக்கும் சாலையாகும். ஒரு நிமிடம் போக்குவரத்து தடைப்பட்டாலும் குறைந்தபட்சம் 3 மணி

# போக்குவரத்துக்கு இடையூறு செய்து வரும் ராம்கோ பட்டு சென்டர்



நேரமாகும் சீராவதற்கு, அப்படிப்பட்ட சாலையில் ராம்கோ நிறுவனம் தன்னுடைய லாப நோக்கத்தை மட்டும் பார்த்து கொண்டு மக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு செய்து கொண்டிருக்கிறார்கள்.

பொதுமக்கள், ராம்கோ நிறுவனம் செய்யும் இந்த இடையூரினால் பல விபத்துக்களுக்கு ஆளாகின்றனர். பொது மக்கள், கர்ப்பிணி பெண்கள் இந்த சாலையை கடந்து மருத்துவமனைக்கு செல்கிறார்கள். இதனால் மிகுந்த வேதனைக்கு ஆளாகுகிறார்கள். இச்சம்பவம் குறித்து அவசர எண். 100ன் மூலமாகவும் பலமுறை புகார் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், காவல் அதிகாரிகள் ராம்கோ நிறுவனத்திற்கு ஆதரவாக செயல்படுகிறார்கள். உடனடியாக தமிழக அரசு ஆணையிட்டு மாவட்ட நிர்வாகத்தை நடவடிக்கை எடுக்க வைக்கமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ராம்கோ நிறுவனம் செய்து வரும் சட்டத்திற்கு புறம்பான இச்செயலின் வீடியோ ஆதாரத்தை மாவட்ட நிர்வாகத்திற்கு ஆதாரமாக கொடுப்பதற்கு தயாராக உள்ளோம்.

பெரிய நிறுவனங்களுக்கு வாகன நிறுத்த வசதி இருக்க வேண்டும் என்று சட்ட விதிகள் கூறுகின்றது. அதை மதிக்காமல் ராம்கோ நிறுவனம் அவர்களது வாடிக்கையாளர்களை சாலையிலேயே வாகனங்களை நிறுத்த வைக்கிறார்கள். வாகனத்தை நிறுத்தும் பொழுதும் வாகனத்தை எடுத்துச்செல்லும் பொழுதும் தினமும் பல விபத்துக்கள் நடந்த வண்ணம் உள்ளது.

சட்டத்தை மதிக்காமல் மிக முக்கியமான பிரதான சாலையில் பொதுமக்களுக்கும் வாகனங்களுக்கும் இடையூராக இருக்கின்ற ராம்கோ நிறுவனத்திடம் சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் பல முறை இது சம்மந்தமாக முறையிட்டும் அவர்கள் செவிசாய்க்கவில்லை. காவல்துறையும் நடவடிக்கை எடுக்கவில்லை.

**பட்டுக்கோட்டை ராம்கோ பட்டு சென்டரில் 10.01.2023 அன்று மாலை 5:30 மணிக்கு ஒரத்தநாட்டை சேர்ந்த அலீஸ் பாத்திமா மற்றும் அவரது மகளும் ஜவுளி எடுக்க கடைக்கு சென்றிருந்தனர், அப்போது அங்கு வேலை பார்க்கும் நபர்கள் அந்த பெண்ணிடம் போன் நம்பரை கேட்டிருக்கிறார்கள் அதன் பிறகு கொடுக்க மறுத்ததால் தவறாக நடக்க முயற்சி செய்திருக்கிறார்கள், உடனே அந்த பாதிக்கப்பட்ட பெண் கூச்சலிட்டவுடன் பொதுமக்களும் காவல்துறையினரும் காப்பாற்றி கேமராவின் பதிவை எடுத்துக் கொண்டு ராம்கோ உரிமையாளரை எச்சரித்து சென்றார்கள்.**

ராம்கோ நிறுவனம் செய்துவரும் இந்த சட்டத்துக்கு புறம்பான செயலால் பொது மக்களும் பள்ளி மாணவ, மாணவிகளும் வாகன ஓட்டிகளும் பல்வேறு இன்னல்களையும் விபத்துகளையும் சந்தித்து வருகின்றனர்.

இச்செயல் தொடரும் பட்சத்தில் பெரும் உயிர்சேதம் ஏற்படும் நிலை உள்ளதாக பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் மாணவமாணவியரின் பெற்றோர்களும் கவலை கொள்கின்றனர்.

இது சம்பந்தமாக பல முறை புகார் அளிக்கப்பட்டும் லாப நோக்கத்தை மட்டுமே கருத்தில் கொண்டு சிறிதும் செவி சாய்க்காமல் செயல்படும் ராம்மோ நிறுவனத்தின் உரிமையாளரிடம் லஞ்சம் பெற்றுக்கொண்டு அதிகாரிகள் செயல்பட்டு வருகிறார்கள்.

இது சம்பந்தமாக ராம்கோ நிறுவனத்தின் உரிமையாளர் திரு.மாரிமுத்து மற்றும் பூமாலை ஆகியோரிடம் பொதுமக்கள் நியாயம் கேட்டதற்கு அனைத்து அதிகாரிகளும் எங்கள் கையிலிருப்பதால் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று அலட்சியமாக பதில் சொல்கிறார்கள்.

இந்நிறுவனத்தின் மீதும் ஆதரவாக செயல்படும் அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது பொதுமக்களின் எதிர்பார்பாக உள்ளது.

பெரும் விபத்துக்கள் நடப்பதற்கு முன்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் தலையிட்டு இந்த ராம்கோ நிறுவனத்தின் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**- கௌரவ துணை ஆசிரியர் S. ரவிக்குமார்**




# மோசடி மன்னன்

# ஹரீஸ்

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் வட்டம் பாகலூர் ரோட்டில் தாசிரிபள்ளி என்னுமிடத்தில் அமைந்துள்ள APM டிசைன் பில்ட் பிரைவேட் லிமிடெட் என்னும் கட்டுமான உதிரிபாகங்கள் தயாரிப்பு நிருவனம் இயங்கி வந்தது இதன் உரிமையாளர் பிரித்திவிராஜான் என்பவர் வங்கி மற்றும் மூலப்பொருட்களை சப்ளை செய்யும் கம்பெனிகளை திட்டமிட்டு ஏமாற்றும் நோக்கில் தொடக்கத்திலிருந்தே (2022 ஏப்ரல் முதல்) யாருக்கும் சரிவர பணம் தராமல் ஏமாற்றி வந்துள்ளார்.

*இதில் மிகாவும் மோசமாக பாதிக்கப்பட்டது SKT டிரேடர்ஸ் என்ற நிருவனமாகும்.*

*இதுபற்றி SKT டிரேடர்ஸின் உரிமையாளர் திரு.கேம்ராஜ் அவர்கள் நமது நிருபரிடம் விளக்கத்தினை பகிர்ந்து கொள்கிறார்.*

*நான் பல சிரமங்களுக்கு மத்தியில் மிகவும் சவாலான சூழ்நிலையில் எனது நிறுவனத்தை*

நடத்தி வந்தேன் அப்போது கடந்த வருடம் ஏப்ரல் மாதம் APM டிசைன் பில்டு பிரைவேட் லிமிடெட் என்ற நிருவனத்தின் உரிமையாளர் திரு. பிரித்திவிராஜன் என்பவர் என்னை அணுகி அவரது நிருவனத்திற்க்கு ஹேண்ட் டூல்ஸ், பவர் டூல்ஸ், பெயின்ட், மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் போன்ற பொருட்கள் வேண்டும் என கேட்டுக்கொண்டதன்பேரில் முறையான பில் மற்றும் அனைத்துவரி உட்பட முறையாக அவரது நிருவனத்துக்கு சப்ளை செய்து வந்தேன் தொடக்கத்தில் சிறிய கணக்குகளுக்குண்டான தொகையை அவரும் எனக்கு வழங்கி வந்தார் பின்பு காலம் செல்ல செல்ல பணம் கேட்ட போது பல காரணங்கள் சொல்லி தட்டி கழித்து வந்தார் அவரை பற்றி விசாரித்தபோது அவர் இந்த நிருவனத்தை தொடங்கியதே நஷ்ட கணக்கு காண்பித்து வங்கியை ஏமாற்றி திவாலானதாக அறிவித்துவிட்டு காப்பீட்டு தொகையை வாங்கி இதில் கடன் கொடுத்தவர்களையெல்லாம் ஏமாற்றி இதில் கிடைக்கும் தொகையை வைத்து வேறு இடத்தில் பினாமி பெயரில் சொத்துக்களை வாங்கி குவித்து வேறு கம்பனி அமைத்து வசதியாக வாழ்வதற்காகதான் இதெல்லாம் செய்தது என்று தெரியவந்தது.

தற்போது அது நடைமுறையில் உள்ளதை காணமுடிகிறது.

எனக்கு கிட்டதட்ட 23,60,736/– ரூபாயை நிலுவையில் வைத்து ஏமாற்றி விட்டு நிருவனத்தையும் மூடிவிட்டு தப்பி சென்று விட்டார் நான் அவரை பலமுறை தொடர்புகொள்ள முயற்சி செய்து பல பொருட்செலவுகள் செய்து கடைசியாக அவரை கடந்த பிப்ரவரி மாதம் கண்டுபிடித்து எனக்கு நீதிவேண்டுமென வற்ப்புறுத்தியதால் அவரது கம்பனியில் உள்ள சில பொருட்களை எனக்கு சேரவேண்டிய தொகைக்கு ஏற்ப்ப எடுத்துக் கொள்ளும்படியும் கூறி அவரது நிறுவன லெட்டர் பேடில் எழுதி கொடுத்தார் அவரால் நேரில் வரமுடியாததால் என்னையே ஆள் வைத்து எடுத்துக்கொள்ளும் படி அனுமதி அளித்தார் நானும் இதை நம்பி ஆட்களை அழைத்துக் கொண்டு அந்த நிருவனத்திற்கு சென்றபோது அந்த கட்டிடத்தின் உரிமையாளர் என கூறிக்கொண்டு வந்த ஹரீஸ் என்பவர் அடியாட்களை கூட்டி வந்து எனக்கும் பணம் கிடைக்க வேண்டியுள்ளது அதனால் நான் பெருட்களை இங்கிருந்து எடுத்து கொண்டு போக சம்மதிக்க மாட்டேன் எனவும் மீறினால் யாரும் இங்கிருந்து உயிருடன் போகமுடியாது எனவும் கூறி மிரட்டல் விடுத்ததால் பொருட்களை எடுப்பதில் தொய்வு ஏற்பட்டுள்ளது.



நிறுவன உரிமையாளர்
ப்ரித்திவிராஜ்
APN பில்ட் டெக் பிரைவட் Ltd



கட்டிட உரிமையாளர் ஹரீஸ்

எனவே APM டிசைன் பில்ட் பிரைவெட் லிமிடடின் உரிமையாளர் பிரித்திவிராஜனும் கட்டிட உரிமையாளர் ஹரீஸ் அவர்களும் கூட்டாக சேர்ந்து கொண்டு அனைவரையும் ஏமாற்றியது தெரியவந்துள்ளது இவர்கள் இருவரும் வெளியே எதிரிகள் போல் காட்டிக்கொண்டு உள்ளுக்குள் கூட்டு சதி செய்துவந்தது அம்பலமாகிறது.

பின்னர் மீண்டும் இது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தும் எந்தவித பயனும் இல்லை இதுசம்பந்தமாக பாதிக்கப்பட்ட எனக்கு நியாயம் கேட்க மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் நிர்வாகிகள் உண்ணாவிரத போராட்டத்தை நடத்தப்போவதாக அறிவித்திருப்பது ஆறுதல் அளிப்பதாக உள்ளது என அவர் தெரிவித்தார்.

**- கௌரவ இணை ஆசிரியர் R. அகிலேஷ்**

# கடலூர் மாவட்டம் மகளிர் காவல் துறை ஆய்வாளர் கவனத்திற்கு...

## கிருபா லெட்சுமி

இதுபற்றி பாதிக்கப்பட்ட மணமகள் பாக்கியலட்சுமியிடம் கேட்டபோது,

எனக்கும் கடலூர் மாவட்டம் வேப்பூர் வட்டம் வண்ணாத்தூர் கிராமத்தில் உள்ள கிருஷ்ணமூர்த்தி – பராசக்தி இவர்களின் மகன் ஹரிகிருஷ்ணன் என்பவருக்கும் இந்து முறைப்படி பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு கடந்த 05.02.2018 அன்று நல்லூர் அருள்மிகு வில்வனேஸ்வரர் ஆலயத்தில்



மகளிர் காவல் துறை ஆய்வாளர் கிருபா லெட்சுமி

திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு முன்பு எங்களிடம் ஹரிகிருஷ்ணன் உறவுக்காரர் குஜராத்தில் உள்ள வல்சாட் எண்.211 2வது தளம் அதினா பேலஸ் ஸ்டேசன் ரோடு என்ற முகவரியில் வசித்து வருவதாகவும்இ இரயில்வேயில் ஹரிகிருஷ்ணன் தந்தை கிருஷ்ணமூர்த்தி இரயில்வேயில் வேலை செய்து வருவதாக கூறினார்கள். திருமணம் முடிந்தவுடன் ஹரிகிருஷ்ணன் சென்னையில் தங்கி வேலை பார்ப்பதாக கூறினார்கள். திருமணம் முடிந்தவுடன் எங்களை குஜராத் மாநிலத்திற்கு அழைத்து சென்றுவிட்டனர். அங்கு நான் நல்ல முறையில் குடும்பம் நடத்தி வந்தேன். இரண்டு மாதம் கடந்தவுடன் எனது கணவர் தினம் குடித்துவிட்டு பான்பராக் போட்டுக்கொண்டு என்னிடம் வீண் பிரச்சனை செய்து வருவார். எனக்கு மொழி தெரியாததால் என்னை தனிமையில் விட்டுவிட்டு எனது கணவர்,அவரது அப்பா, அம்மா மூவரும் தனியாக பேசிக்கொண்டு கிண்டல் செய்வார்கள்.

மேலும் எனது கணவர் வைத்திருக்கும் செல்போனுக்குபோன்வந்தால்அதைஎடுத்துக் கொண்டு அடுத்த ரூமுக்கு சென்றுவிடுவார். அதை நான் கண்டுகொள்ளாமல் இருந்தேன். ஒருநாள் அந்த போனை எடுத்து ஷோபா மேல் வைத்தேன். அப்போது பராசக்தி போனை பிடுங்கி நீ அந்த போனை தொடக்கூடாது. என் மகன் யார் கூட வேண்டுமானாலும் பேசுவான். அவனை நான் செல்லமாக வளர்த்து வருகிறேன். மீண்டும் அதுபோல் செய்தால் உன்னை இங்கு நிம்மதியாக வாழவிடமாட்டேன். என்று என் மாமியார் என்னை மிரட்டினார். என்னிடம் என் கணவர் சரியான முறையில் பேசுவது இல்லை பழகுவது இல்லை தினமும் இரவில் அவர் அம்மா அப்பாவுடன் படுத்து கொள்வார். குடும்பத்தில் நான் எந்த வேலை செய்தாலும் அதில் குறை கூறிக்கொண்டே என்னை ஒரு கொத்தடிமை போல் நடத்தி வந்தனர். ஒருநாள் பிளாஸ்டிக் வாளியில் தண்ணீர் பிடித்து குளிக்கும்போது என்னுடைய துணியை துவைத்து அலசும்போது எனது மாமியார் என்னை அசிங்கமாக திட்டி எனது குடும்பத்தையும் இ இழிவாக பேசி என்னை கேட்காமல் அந்த பக்கெட்டில் எப்படி நீ துணி அலசலாம் என்று கேவலமாக திட்டினார். அப்போது அங்கிருந்த எனது மாமனார் கிருஷ்ணன்மூர்த்தி என்பவர் என்னை பார்த்து நீ எங்களுக்கு தேவையில்லை நாங்கள் சொல்வதை கேட்டு இருந்தால் இரு இல்லையென்றால் நீ ஊருக்கு கிளம்பு உங்கள் வீட்டில் விட்டுவிட்டு வந்து எனது மகனுக்கு 2வது திருமணம் செய்து வைக்க முடியும் உங்களால் எங்களை ஒன்றும் பண்ணமுடியாது என்று மிரட்டினார். நடந்த சம்பவத்தை எனது கணவரிடம் கூறினேன். அப்போது ஆமாம் நான் எங்க அம்மா அப்பா பேச்சைதான் கேட்பேன். நான் வேறொரு பெண்ணை விரும்புகிறேன். நீ



மணமக்கள்






எதையும் கண்டுகொள்ளகூடாது மீறி நடந்து கொண்டால் உன்னை வீட்டுக்குள் வைத்து பெட்ரோல் ஊற்றி கொளுத்தி விடுவோம் என்று மூவரும் திட்டம் போட்டு மிரட்டி வந்தனர். நான் பயந்து கொண்டு வீட்டில் இருந்தேன். அதன் பின் அவர்கள் செய்கை நாளுக்கு நாள் அதிகமாகிவிட்டது. என்னை குஜராத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு 13.08.2019 அன்று என்னை எனது கணவர் மாமியார் மாமனார் என்னை பெண் பார்த்த அவரது உறவுக் காரரான சாத்தநத்தம் கிராமத்தைச் சேர்ந்த பரமசிவம் (லேட்) மகன் தேசிங்குராஜா அவரது உறவுக்காரர் செந்தாமரை மேளக்காரர் கொளஞ்சி ஆகிய அனைவரும் வந்து என்னை எங்களது வீட்டில் விட்டுவிட்டு ஒரு மாதம் வீட்டில் இருக்கட்டும் பிறகு வந்து அழைத்து கொள்கிறோம் என்று கூறி விட்டு சென்றுவிட்டனர். மறுபடி எனது கணவருக்கு போன் செய்யும்போது உன்னை எனக்கு பிடிக்கவில்லை எனக்கு எங்க அப்பாஇ அம்மா 2வது திருமணம் செய்து வைக்க போறாங்க நீ இனி எனக்கு போன் செய்யகூடாது என்று போனை கட் செய்து விட்டார். இந்த மனவேதனையில் எனது தாய் மன உளைச்சல் காரணமாக கடந்த 02.03.2020 அன்று இறந்துவிட்டார்.

கடந்த 10.11.2020 அன்று குஜராத்தில் இருந்து எனக்கு வக்கீல் நோட்டீஸ்(டைவர்ஸ் நோட்டீஸ்) அனுப்பி இருந்தார். அதை பார்த்து அதிர்ச்சியடைந்தோம். என்னை எனது கணவர் இந்து முறைப்படி திருமணம் செய்து கொண்டு என்னை நல்ல முறையில் வாழவிடாமல் துன்புறுத்தி அடித்து உதைத்து கொடுமைப்படுத்தி வந்தனர். இதற்கு உடந்தையாக மேற்கண்ட அனைவரும் சேர்ந்து கொண்டு எனது கணவருக்கு 2வது திருமணம் செய்ய திட்டமிட்டு உள்ளனர். திருமணத்தின் போது எங்கள் வீட்டில் இருந்து சீர்வரிசையாக 15 பவுன் தங்க நகை கை செயின் 1 பவுன் செயின் 1 பவுன் மோதிரம் ½ பவுன் ஆக மொத்தம் 17½ பவுன் மற்றும் வாஷிங்மெஷின் பிரிட்ஜ் ஷோபாகட்டில் மற்றும் சீர்வரிசை சாமான்கள் இருசக்கர வாகனத்திற்கு பதிலாக ரூ.80000 கொடுத்துள்ளோம். கடந்த 12.09.2022 அன்று தேசிங்குராஜா மேளக்காரர் கொளஞ்சியை பார்த்து என் கணவரை என்னுடன் சேர்ந்து வாழ பேசுங்கள் என்றதற்கு உனது கணவர் ஹரிகிருஷ்ணனுக்கு 2வது திருமணம் செய்து வச்சாச்சு உங்களால் அவர்களை ஒன்றும் செய்யமுடியாது என்று அவர்களுக்கு சப்போட்டாக பேசிவிட்டு சென்றுவிட்டனர்.

தொடர்ந்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் கிருபா லட்சுமி அவர்கள் கடையாக ஒரு வாய்ப்பு தருகிறேன், உங்கள் வழக்கு குஜராத் நீதிமன்றத்தில் ஒரு தலைபட்சமாக உங்களுக்கு எதிராக தீர்பாகியுள்ளது.

அதனால் நடவடிக்கை எடுக்க முடியாது என கூறிவிட்டார். இதனால் பாதிக்கப்பட்டவருக்கு ஆதரவாக மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம் போரட்டம் நடத்துவதாக அறிவித்துள்ளதால் பரபரப்பு ஏற்பட்டு உள்ளது.

- பொறுப்பு ஆசிரியர் பெரம்பலூர் M. இளவரசன்.

# ECR ரோட்டில் குப்பையை கொட்டும்!

## ஊராட்சி செயலாளர் கலா





ஊராட்சி செயலாளர் கலா

பட்டுக்கோட்டை தாலுக்கா ஏரிப்புறைக்கரை கிராமத்தில் ஊராட்சி மன்ற தலைவர் சக்தி அவர்கள் ஊராட்சி செயலாளர் திருமதி கலா இருவரும் ஊராட்சிக்கு உட்பட்ட கழிவு குப்பைகளை ஏரிப்புறக்கரைக்கு உட்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு இடையூராக தேசிய நெடுஞ்சாலையின் வலது பகுதியில் குப்பைகளை கொட்டி குப்பை கிடங்காக மாற்றியிருக்கிறார்கள்.

இதனால் கொசுக்கள் உற்பத்தியாகி பல நோய்கள் ஏற்பட்டு வருகிறது. மேலும் தேசிய நெடுஞ்சாலையில் குப்பைகள் கிடப்பதால் பல விபத்துக்கள் ஏற்படுகிறது. மேலும் இன்று வரை குப்பை கழிவுகளை கொட்டி வருகின்றார்கள். இந்த குப்பை கழிவுகளால் சுமார் 10 மீட்டர் தூரத்தில் உள்ள ஏரியில் கலந்து மீன்கள் செத்து வருகின்றன. மேலும் குளிப்பவர்களுக்கு நோய் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். மேற்படி இடம் காற்று பகுதி என்பதால் சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் வரை நோய் பரவ வாய்ப்பு உள்ளது. மேலும் தன்னுடைய சுயநலத்துக்காக ஊராட்சி மன்ற தலைவர் சக்தி அவர்கள் அந்த நெடுஞ்சாலை இடது பக்கத்தில் அவருடைய இடத்தில் அருகில் அரசுக்கு சொந்தமான வாய்க்கால்களை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டி இது சம்பந்தமாக உயர் அதிகாரிகளிடம் புகார் கொடுத்தும் அவர் ஊராட்சி மன்ற தலைவராக இருப்பதால் நடவடிக்கை எடுக்க தயங்குகிறார்கள்.

- கௌரவ இணை ஆசிரியர் A. கேம்ராஜ்






## கற்றலின் புகலிடமான சென்னை பல்கலை.:

# 165வது பட்டமளிப்பு விழாவில் குடியரசுத் தலைவர் முர்மு புகழாரம்

**நாட்டின் 6 குடியரசுத் தலைவர்கள், நோபல் விருதாளர்கள் என்று எண்ணற்ற மேதைகளை உருவாக்கியதன் மூலம் கற்றலின் புகலிடமாக சென்னை பல்கலைக்கழகம் திகழ்கிறது என்று சென்னையில் நடைபெற்ற 165வது பட்டமளிப்பு விழாவில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு புகழாரம் சூட்டியுள்ளார்.**

சென்னை பல்கலைக்கழகத்தின் 165வது பட்டமளிப்பு விழா, சென்னை அண்ணா பல்கலைக்கழக அரங்கில் நேற்று நடைபெற்றது. இதில், குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பங்கேற்றார். மேலாண்மை கல்வி படிப்பில் 'கிரேட் பிரிட்டன், அமெரிக்கா, இந்தியா இடையே உயர்கல்வியில் ஓர் ஒப்பீடு' என்ற தலைப்பில் முனைவர் பட்டப் படிப்பை முடித்த விஐடி பல்கலைக்கழக துணை தலைவர் ஜி.வி.செல்வம், பொருளாதார துறையில் 'மத்திய அரசின் நிதி பகிர்வால் மாநிலங்களின் வளர்ச்சி, பொது செலவினம், வருவாயில் ஏற்படும் மாற்றங்கள்' என்ற தலைப்பில் முனைவர் பட்டப் படிப்பை முடித்த முன்னாள் தலைமைச் செயலர் கே.சண்முகம் மற்றும் சிறப்பிடம் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை குடியரசுத் தலைவர் முர்மு வழங்கினார்.

விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி, முதல்வர் ஸ்டாலின், உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி, சென்னை பல்கலைக்கழக

துணைவேந்தர் ச.கவுரி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு:**

நாகரிகம், கலாச்சாரத்தின் தொட்டிலாக தமிழகம் திகழ்கிறது. சங்க இலக்கியத்தின் செழுமையான மரபுகள் இந்தியாவின் விலைமதிப்பற்ற பாரம்பரியம் ஆகும். திருக்குறளில் பொதிந்துள்ள மகத்தான கருத்துகள் பல நூற்றாண்டுகளாக நம்மை வழிநடத்தி வருகின்றன. சென்னை பல்கலைக்கழகம் மற்றும் அதன் இணைப்பு கல்லூரிகளில் சுமார் 1.85 லட்சம் பேர் பயில்கின்றனர். இதில் 50 சதவீதத்துக்கும் அதிகமானோர் மாணவிகள். இன்று தங்கப் பதக்கம் பெற்ற 105 பேரில் 70 சதவீதம் பேர் மாணவிகள்.

1857 ல் தொடங்கப்பட்ட சென்னை பல்கலைக்கழகத்தின் 165 ஆண்டு பயணத்தில் எண்ணற்ற அறிஞர்கள், தலைவர்கள், தொலைநோக்கு பார்வையாளர்களை உருவாக்கி, கற்றலின் புகலிடமாக திகழ்கிறது.

எனது முன்னோடிகளான டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன், வி.வி.கிரி, நீலம் சஞ்சீவ ரெட்டி, ஆர்.வெங்கட்ராமன், கே.ஆர். நாராயணன், அப்துல் கலாம் என 6 முன்னாள் குடியரசுத் தலைவர்கள், நாட்டின் முதல் கவர்னர் ஜெனரல் ராஜகோபாலாச்சாரி, நோபல் பரிசு பெற்று அறிவியல் உலகுக்கு சிறப்பான பங்களிப்பை வழங்கிய சர்.சி.வி.ராமன், எஸ்.சந்திரசேகர் ஆகியோர் இந்த பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்கள். அதிநவீன ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவும், துறைகளுக்கு இடையேயான ஆய்வுகள், சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவிக்கவும் இப்பல்கலைக்கழகம் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

-முதன்மை துணை ஆசிரியர் M. லோகேஷ்

## கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் காமராஜர் பேருந்து நிலையம் அருகில் மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம் திருவருள் பேரவை இணைந்து நடத்தும் 76 வது சுதந்திர தின விழா...



**நாள்: 15-08-2023, செவ்வாய் கிழமை, நேரம்: காலை 930 மணி.**

**தலைமை**

மௌலவி RNK. அபுஷாலிஹ் பாகவி

**முன்னிலை**

Dr. முருகேசன் சர்வதேச துணை தலைவர்,
R. ஷாம்எட்வர்ட் மாநில துணை செயலாளர்
அ. நசீர் நகர்மன்ற தலைவர், S ஜெயரஹர்
மாவட்ட துணைச் செயலாளர் திருவருள் பேரவை
பிரதாப்சிங் மாவட்ட துணை செயலாளர்

**வரவேற்புரை**

H ஹாஜா முஹ்யீத்தின்
மாவட்ட செய்தி தொடர்பாளர்



**வாழ்த்துரை**

V. ராதாகிருஷ்ணன்
நகரச் செயலாளர் திருவருள் பேரவை
P. நடராஜன் மாவட்டத் துணைத் தலைவர்
அ. ஆன்ஸ்லின்
பல் சமய உரையாடல் பணி குழு இயக்குனர்

**சிறப்புரை**

மௌலவி M. மீர் காசிம் மைதானி
மாவட்ட தலைவர்
M. அப்துல் கரிம்
அமைப்பாளர் இஸ்லாமிய முன்னேற்ற சங்கம்

**கொடியேற்றி நலத்திட்டம் உதவிகளை துவக்கி வைப்பவர்**

ஜென்சன் J. ஜோசப் S/o Dr M. ஜெயஹர் ஜோசப்
தாளாளர் ஜோசப் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி குளச்சல்
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்.
Dr. S. முகம்மது அலி
மாநிலத் துணைத் தலைவர்





பாதிக்கப்பட்ட நபர்

இந்நிலையில் இவர்கள் வீட்டிற்கு பின்புறம் உள்ள பால்பாண்டி என்பவர் பஞ்சவர்ணதின் குடும்பத்தை மிரட்டி நீ உன் வீட்டை விற்பனை செய்து விட்டு காலி செய்து விடு என மிரட்டி வருகிறார். அதற்கு

# பாதையை கொடு (அ) உன் மனைவியை படுக்க கொடு

## ஊனமுற்றோரை மிரட்டும் பால்பாண்டி

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தாலுக்கா மஞ்சூர் அருந்ததியர் தெருவில் வசிக்கும் மாரி ஊனமுற்ற இவருடைய மனைவி பஞ்சவர்ணம் இவர்களுக்கு ஒரு ஆணும் இரண்டு பெண் குழந்தையும் உள்ளது. தன்னுடைய ஊனமுற்ற கணவரையும் குழந்தைகளையும் பஞ்சவர்ணம் அவர்கள் வேலைக்கு சென்று தான் குடும்பத்தை காப்பாற்றி வருகிறார்கள்.



பாதிக்கப்பட்ட நபர்கள்

**இது பற்றி சமூக ஆர்வலர் நஸ்ரத் பேகத்திடம் கேட்டபோது**

என் வீட்டில் அருகில் தான் ஊனமுற்றோர் வசித்து இருக்கிறார் ஆனால் எதிர்மனுதாரர் ஆள் பலமும் பணம் பலமும் இருப்பதால் பாதிக்கப்பட்டவர்கள் ஊனமுற்றோர் இருப்பதால் அவர்கள் எதிர்த்து போராட முடியவில்லை என்னால் முடிந்த அளவிற்கு மக்கள் ஊழல் திருப்பு இயக்கத்திடம் அணுகி நியாயம் கிடைக்க வேண்டி இருப்பதால் மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு போட சொல்கிறேன் விரைவில் பாதிக்கப்பட்டவருக்கு நியாயம் கிடைக்கும் என்று முடித்துக் கொண்டான்.

பஞ்சவர்ணம் அவர்கள் எனது கணவர் ஊனமுற்றவராக இருப்பதாலும் என்னுடைய குழந்தைகள் பள்ளியில் படிப்பதாலும் நான் எங்கும் சென்று பிழைக்க முடியாது என்று பால்பாண்டியின் காலில் விழுந்து பஞ் சவர்ணம் கெஞ்சி இருக்கிறார்.

ஆனால் எதற்கும் அஞ்சாத பால்பாண்டி உன் வீட்டை காலி பண்ணாமல் விட மாட்டேன் என்று சபதம் எடுத்திருக்கிறார். இது சம்பந்தமாக பஞ்சவர்ணம் அவர்கள்



**மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் S. பதனிஷா பேகதிடம் கேட்ட போது...**

அரசு அதிகாரிகள் ஒருதலைபட்சமாக நடந்து கொள்கிறார்கள் எங்களுக்கு ஏன் என்று புரியவில்லை? நான் இது சம்பந்தமாக தலைமையிடம் அனுமதி வாங்கிக்கொண்டு இந்த மாத கடைசியில் பரமக்குடி தாலுக்கா ரோடு முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பற்றும் படி ஊர் தலைவர்கள் காலில் விழுந்து கெஞ்சி இருக்கிறார். ஆனால் ஏழையாக இருப்பதால் யாரும் இவருக்கு ஆதரவு அளிக்கவில்லை பிறகு பால்பாண்டி அவர்கள் அரசு அதிகாரிகளை கையில் போட்டுக்கொண்டு அரசு நில வரைபடத்தை மோசடி செய்து தனக்கு வேண்டிய சர்வையரை அழைத்துக் கொண்டு வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் வீட்டை அளந்து விட்டு அவர்களை அங்கிருந்து விரட்ட பார்த்திருக்கிறார். இதற்கு சில அரசு அதிகாரிகள் துணை போயிருக்கிறார்கள்.

தற்போது அரசு அதிகாரிகள் பால்பாணியிடம் லஞ்சம் பெற்றிருப்பதால் பஞ்சவர்ணத்தின் குடும்பத்தை ஒரு வாரத்தில் காலி செய்து விட வேண்டும் என மிரட்டி வருகிறார்கள்.



பிறகு அடிக்கடி பால்பாண்டி அவர்களும் பஞ்சவர்ணத்தின் வீட்டை கொளுத்தி விடுவேன் என மிரட்டி வருகிறார். இது சம்பந்தமாக முதலமைச்சர் தனி பிரிவுக்கும் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களுக்கும், பரமக்குடி கோட்டாட்சியர் அவர்களுக்கும், பரமக்குடி வட்டாட்சியர்



**இது சம்பந்தமாக உரிமைகள் மீட்பு பத்திரிகை உதவி ஆசிரியர் R. M. ராமச்சந்திரன்...**

இப்போது உலகத்தில் மனிதாபிமானம் இல்லாமல் போய்விட்டது வரும் காலத்தில் அனைவருக்கும் கண்டிப்பாக இறக்க குணம் வர வேண்டும் கண்டிப்பாக பாதிக்கப்பட்டவர்கள் ஊனமுற்றவரை இருப்பதால் மாவட்ட அதிகாரிகளும் முதலமைச்சர்கள் அவர்களும் கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பார்கள் அதுவரையிலும் அதிகாரிகள் ஊனமுற்றவரை காலி செய்யக் கூடாது என்றும் அவர்களுக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றும் கூறினார்.

அவர்களுக்கும், புகார் அனுப்பி வழக்கம்போல் அந்த மனுக்கள் நடவடிக்கை எடுக்கப்படாமல் எடைக்கு போயிருப்பதாக தெரிகிறது.

எதிர்காலத்தில் எப்படியும் நீதி கிடைக்கும் என நம்பி இருக்கும் பஞ்சவண்ணம் ஒருபுறமும் அரசு அதிகாரிகள் எதிரிகளிடம் லஞ்சம் பெற்றுக் கொண்டு பஞ்சவர்ணத்துக்கு எதிராக செயல்படுவதால் தனக்கு நியாயம் கடவுள் கொடுப்பாரா அல்லது தமிழக முதலமைச்சர் கொடுப்பாரா என போராடி வருகிறார்.

மனசாட்சி வெல்லுமா அல்லது பணசாட்சி வெல்லுமா ?

என்பதுதான் தற்போது பொது மக்களின் மிக பெரிய ஆதங்கமாக உள்ளது.

**- நிருபர் தாமரைகனி**



# முதல்வர் பெயரில் கனிம வளக் கொள்ளை...

## ஆளுங்கட்சி கூட்டு சேரும்... அதிகாரிகள்...

**ராமநாதபுரத்தில் முதல்வர் பெயரைச் சொல்லி ஆளுங்கட்சியினர் சட்டவிரோத மணல் கொள்ளையில் ஈடுபட்டுவருவதாகவும், அதற்கு அதிகாரிகளும் உடந்தை எனவும் பரபர குற்றச்சாட்டு கிளம்பியிருக்கிறது.**

வரும் 17ம் தேதி, ராமநாதபுரத்தில் தி.மு.க வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டமும், மறுநாள் மீனவர்கள் மாநாடும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறவிருக்கிறது. இதற்காக, தேவிப்பட்டினம் பேராவூர் சாலையில் அமைந்திருக்கும் மைதானம், மண்டபம் முகாம் அருகேயுள்ள மைதானம் ஆகிய இரண்டு இடங்களிலும் ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. தி.மு.க மாவட்டச் செயலாளரும், எம்.எல்.ஏவுமான காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், ராமநாதபுரம் மாவட்டப் பொறுப்பு அமைச்சர் ராஜகண்ணப்பன் உள்ளிட்டோர் அந்தப் பணிகளை கவனித்துவருகிறார்கள். இரு மைதானங்களையும் சமன்படுத்துவதற்காக மண் அள்ள, ராமநாதபுரம் தாசில்தாரிடம்



இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்காத ராமநாதபுர மாவட்ட அதிகாரிகள் மீதும் சட்டமன்ற உறுப்பினர் மீதும் கண்டனம் தெரிவித்து மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம் உண்ணாவிரத போராட்டம் நடத்த போவதாக அறிவித்திருப்பதால் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டுள்ளது.



மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் தேசிய தலைவர் G. வெங்கடேசனிடம் கேட்டபோது...

"ராமநாதபுரத்தில் பெயருக்குத்தான் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் மாவட்டச் செயலாளராக இருக்கி|றார். ஆனால், ஆக்டிங் மா.செவாகச் செயல்படுவது அவரின் தம்பி மூவேந்தன்தான். கட்சியில் எந்தப் பொறுப்பிலும் இல்லாத அவருடைய செல்வாக்கு பெரியது. மூவேந்தனின் மேற்பார்வையில்தான் இந்த வேலைகள் எல்லாம் நடந்திருக்கின்றன. நகர்மன்றத் தலைவர் கார்மேகத்தின் மகன் கார்த்தி பெயரில் அனுமதி வாங்கி, அதைத் தவறாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். நொச்சி ஊரணியில் தடைசெய்யப்பட்ட வெள்ளை மணலைச் சட்டவிரோதமாக அள்ளியதோடு, 'கட்டு மணல் ஆறு யூனிட் 30,000 ரூபாய்' என வாட்ஸ்அப்பில் ஸ்டேட்டஸ் வைத்து விற்பனையிலும் ஈடுபட்டிருக்கிறார் கார்த்திக். இந்த விவகாரம் பூதாகரமாகி, கட்சித் தலைமை வரை சென்று கண்டித்ததால், மணல் அள்ளுவதை நிறுத்தினர். இவரால் ராமநாதபுரத்தில் தி.மு.கவுக்குத் தொடர்ந்து களங்கம் ஏற்பட்டுவருகிறது" என்றனர் ஆதங்கத்துடன்.

## மணல் கொள்ளை



இது குறித்து பா.ஜ.க மாவட்டத் தலைவர் தரணி முருகேசன் நம்மிடம் பேசும்போது, "முதலமைச்சர் நிகழ்ச்சி நடக்கும் இடத்திலிருந்து 18 கிலோமீட்டர் தொலைவிலுள்ள நொச்சி ஊரணியில், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களே முதலமைச்சர் பெயரைச் சொல்லி மணல் கொள்ளையில் ஈடுபட்டிருக்கிறார்கள். கண்மாய்களில் சவுடு மண் எடுப்பதற்குத்தான் அனுமதி இருக்கிறது. ஆனால், 'வெள்ளை மணல்' எனும் கட்டு மணல் அள்ள நீதிமன்றம் தடைவிதித்திருக்கிறது. அதையும் மீறி மணல் கொள்ளையில் ஈடுபட்டவர்கள்மீது மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்கவில்லை. அதிகாரிகளும், மணல் கொள்ளை கும்பலுக்கு உடந்தையாகச் செயல்பட்டிருக்கிறார்கள். இது குறித்து முதல்வர் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் தமிழக பா.ஜ.க கடுமையான போராட்டங்களை முன்னெடுக்கும்'' என்றார்.



சம்பந்தமாக மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தில் மாநில இயக்குனர் M. இளவரசனிடம் கேட்டபோது...

"முதலமைச்சர் நிகழ்ச்சி நடக்கும் இடத்திலிருந்து 18 கிலோமீட்டர் தொலைவிலுள்ள நொச்சி ஊரணியில், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களே முதலமைச்சர் பெயரைச் சொல்லி மணல் கொள்ளையில் ஈடுபட்டிருக்கிறார்கள். கண்மாய்களில் சவுடு மண் எடுப்பதற்குத்தான் அனுமதி இருக்கிறது. ஆனால், 'வெள்ளை மணல்' எனும் கட்டு மணல் அள்ள நீதிமன்றம் தடைவிதித்திருக்கிறது. அதையும் மீறி மணல் கொள்ளையில் ஈடுபட்டவர்கள்மீது மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்கவில்லை. அதிகாரிகளும், மணல் கொள்ளை கும்பலுக்கு கூட்டு செயல்பட்டிருக்கிறார்கள். இது குறித்து முதல்வர் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம் கடுமையான போராட்டங்களை முன்னெடுக்கும்'' என்றார்.

தி.மு.க நகர் மன்றத் தலைவர் கார்மேகத்தின் மகன் கார்த்திக் அனுமதி கேட்டிருக்கிறார்.

இந்தச் சூழலில்தான், 'முதலமைச்சர் நிகழ்ச்சி எனக் கூறி, பேராவூர் பழங்குளம் கண்மாயிலிருந்து சட்டவிரோதமாக மணல் அள்ளப்பட்டு, லோடு லோடாக எடுத்துச் சென்று விற்பனை செய்யப்படுவதாக' புகார் எழுந்திருக்கிறது. இந்த மணல் கொள்ளைக்கு பேராவூர் ஊராட்சி மன்றத் தலைவி ஜெயலட்சுமி உடந்தை என அதே பகுதியைச் சேர்ந்த வார்டு உறுப்பினர் நாகராஜ் என்பவர் சமூக வலைதளத்தில் பதிவிட்டிருந்தார். இதையடுத்து, ஊராட்சி மன்றத் தலைவியின் கணவர் மாரிமுத்துவுக்கும், நாகராஜனுக்குமிடையே கைகலப்பும் ஏற்பட்டிருக்கிறது. இதையடுத்து, ''முதல்வர் வருகை என்ற பெயரில் இரவு பகலாக மணல் கொள்ளை..! கனிம வளச் சுரண்டலை கண்டுகொள்ளாத அதிகாரிகள்' என ராமநாதபுரம் முழுவதும் போஸ்டர் ஒட்டப்பட்டு பரபரப்பைக் கூட்டியிருக்கிறது. தற்போது, மைதானத்தைச் சமன்படுத்த மண் அள்ளுவதற்காக தாசில்தார் அளித்த அனுமதியும் ரத்துசெய்யப்பட்டிருக்கிறது.

**- செய்தி ஆசிரியர் R. M. ராமச்சந்திரன்**

# பாளையங்கோட்டை கிருஷ்த்துராஜா பள்ளிகூட ஆசிரியர்களின் சாதி வெறியும் மதவெறியும் நடவடிக்கை எடுக்குமா

# பள்ளி கல்விதுறை? (அ) துணை போகுமா?







கிருஷ்த்துராஜா பள்ளியில் 11'D' வகுப்பில் படிக்கும் நடுவகுறிச்சியை சார்ந்த மூன்று பள்ளி மாணவர்களையும், சாதியை சொல்லி திட்டியும் மதத்தை சொல்லி திட்டியும் கம்பால் அடித்தும் காலால் மிதித்து, தாக்கியும் ஆபாசமாக பேசியும் அடித்துள்ளனர்.

ஆசிரியர் கிங்ஸ்லி மற்றும் தலைமை ஆசிரியர் கனிஸ் பீட்டர் ஆகியோர் கொடூர தாக்குதலில் ஈடு பட்டுள்ளனர். இந்து மாணவர்கள் படித்து என்ன நடக்க போகிறது இந்த சாதியை சேர்ந்த நீ படித்து என்ன ஆக போகிறது, என்றும் ஆபாசமாக பேசி அடித்து சித்ரவதை செய்ததோடு இனி நீ பள்ளிக்கு வராதே சித்தாள் வேலைக்கு போ என்று வந்தால் காலை உடைத்து விடுவேன், என்று மிரட்டி படுகாயத்துடன் பாளை அரசு ஆஸ்பத்திரியில் மூன்று மாணவர்களும் அனுமதி.

**நாடார் சமுதாய மக்களுக்கு முன்னுரிமை கொடுத்து விட்டு மற்ற ஜாதி புறகணிக்கப்படுகிறார்கள்.**

அரசு நடவடிக்கை எடுக்குமா? மத வெறிகொண்ட கும்பல்களை களையெடுக்குமா?

பள்ளிகள்தான் நல்ல தலைமுறையை உருவாக்க முடியும் அந்த பள்ளியில் சாதி மத உணர்வை தூண்டுவது நியாயமா?

நடவடிக்கையை எதிர்நோக்கி காத்திருக்கும் திருநெல்வேலி பொதுமக்கள்.

- நிருபர் பட்டுக்கோட்டை S. பாஸ்கர்





# என்னை திருமாவளவன் திருமணம் செய்ய மறுப்பதால் எனக்கு இந்த கதி!

## கோவை கவிதா பரபரப்பு புகார்!

**விடுதலை சிறுத்தைகள் கட்சித்தலைவர் திருமாவளவன் தன்னை திருமணம் செய்ய மறுப்பதால் சிலர் தனக்கு கொலை மிரட்டல் விடுவதாக கோவையைச் சேர்ந்த கவிதா கூறியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

தன்னை திருமணம் செய்து கொள்வதாகக்கூறி ஏமாற்றியதாக, விடுதலை சிறுத்தைகள் கட்சித்தலைவர் திருமாவளவன் மீது திடுக் புகார் ஒன்றை கூறி பரபரப்பை ஏற்படுத்தியவர் கோவையைச் சேர்ந்த கவிதா. கடந்த 2013ம் ஆண்டு முதல் பல்வேறு புகார்களை இவர் திருமாவளவன் உள்ளிட்டோர் மீது தொடர்ச்சியாக தெரிவித்து வருகிறார். இந்நிலையில் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு வந்த கவிதா, தன் உயிருக்கு ஆபத்து உள்ளதாக பரபரப்பு புகார் ஒன்றை அளித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய கவிதா, திருமாவளவனிடம் நான் பேசியது, பழகியது எல்லாமே உண்மை. ஆனால் அவர் என்னை திருமணம் செய்து கொள்ள மறுத்து விட்டார். இந்த சூழலை பயன்படுத்தி என்னை சிலர் மிரட்டுகிறார்கள். கோவை மாநகர காவல்துறை அதிகாரி மற்றும் ஆளுங்கட்சி முக்கிய பிரமுகர்களை கொண்டு என் சொத்தை அபகரித்து வருகின்றனர். இப்போது கூட என் குழந்தை, என் நகை அவர்களது கட்டுப்பாட்டில்தான் உள்ளது.

என் சொத்துப்பத்திரம், வங்கி கணக்கு பத்திரங்களில் கையெழுத்து வாங்கி விட்டனர். என் வீட்டில் கண்காணிப்பு கேமராவை பொருத்தி, என்னை கண்காணிக்கிறார்கள். இது தொடர்பாக காவல்துறையில் புகார் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அரசியல் பிரமுகர்கள் இதில் தொடர்பு கொண்டிருப்பதால் நடவடிக்கை எடுக்க தயங்குகின்றனர்.

திருமாவளவன் என்னை திருமணம் செய்ய மறுத்ததை பயன்படுத்தி இவர்கள் இவ்வாறு செய்கின்றனர். என்னை கொன்று விடுவதாகவும் மிரட்டுகின்றனர். இதற்கிடையே கடந்த வாரம் திருமாவளவன் மீது நான் கொடுத்த புகாரை, தேர்தலை காரணம் காட்டி என்னை நிர்பந்தித்தும், மிரட்டியும் வாபஸ் பெற வைத்து விட்டனர். என்னுடைய உடம்பில் மைக்ரோ சிப்பை பொருத்தி கண்காணித்து வருவதாகவும் நான் அஞ்சுகிறேன். உயிருக்கு அஞ்சி வாழ்ந்து வரும் எனக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

திருமாவளவனுக்கு எதிராக கவிதா புகார் கூறுவது கடந்த இரு ஆண்டுகளில் இது 10வது முறை. இந்த புகார்களுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி மறுப்பு தெரிவித்துவருகிறது. கவிதாவுக்கும், கட்சித்தலைவர் திருமாவளவனுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று அவர்கள் தெரிவித்து வந்தனர். இந்நிலையில், மீண்டும் விட்ட இடத்தில் இருந்து கவிதா துவங்குவது ஏன் என்பதுதான் புரியவில்லை.

**- கௌரவ இணை ஆசிரியர் M. ஜெய்பிரசாத்**



# நாகர்கோவில் வடசேரி கனகமூலம் காய்கறி மார்க்கெட்டை இடமாற்றம் சம்பந்தமாக வியாபாரிகள் சங்கத்தினர் போராட்டம் நடத்தினார்கள்...

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி பராமரிப்பில் உள்ள வடசேரி கனகமூலம் சந்தை பகுதியானது மொத்தம் சுமார் 4.5 ஏக்கர் பரப்பளவு கொண்டுள்ளது, இந்த சந்தையானது 150 வருடத்துக்கு மேல் பழமை வாய்ந்தது இது தொன்றுதொட்டு வியாபாரிகளுக்கு வேண்டி கனகமூலம் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் தலைநகராக விளங்கியது, பத்மநாபபுரம் ஏழை எளிய மக்கள் வியாபாரம் செய்து பயன் பெற வேண்டுமென்ற ஒற்றை நோக்கத்துடன் இலவசமாக கொடுத்ததாகும், இதன் பராமரிப்பு பணிகள் மட்டும் மாநகராட்சியால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

*இந்த 4.5 ஏக்கர் பரப்பளவில் மாநகராட்சியால் 2017ல் புதிதாக 260 கடைகள் கட்டப்பட்டு தலா ஒரு கடைக்கு ஒரு லட்ச ரூபாய் முன்பணமும் மற்றும் ஒரு வருட வாடகையையும் முன்னதாக பெற்றுக்கொண்டு வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.*

*இந்நிலையில் கொரோனா பெருந்தொற்று ஏற்ப்பட்ட காலகட்டத்தில் வியாபாரம் செய்ய முடியாத குழ்நிலையிலும்கூட மாநகராட்சி தரப்பில் வாடகை கேட்டு கடைகளை சீல் வைத்து நச்சரித்த சூழ்நிலையால் சுமார் 100 பேருடைய கடைகள் வியாபரத்தை மேற்கொண்டு செய்ய முடியாமல் வியாபாரத்தையும் கடையையும் கைவிட்டுவிட்டு சென்றார்கள்.*

*இது போல வியாபாரிகளுக்கு எதிராகவே தொடர்ந்து மாநகராட்சி நிர்வாகம் செயல்பட்டு வந்துள்ளது.*



இது சம்பந்தமாக மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் சர்வதேச பொதுச் செயலாளர் C. J. சுதர்மன் BA BL கேட்டபோது...

வடசேரி பகுதியில் ரூ.55 கோடி செலவில் நவீன பஸ் நிலையம் அமைக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதையடுத்து பஸ் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மாநகராட்சி நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது. வடசேரி கிறிஸ்டோபர் பஸ் நிலையம், ஆம்னி பஸ் நிலையத்தின் மையப்பகுதி யில் புதிய பஸ் நிலையத்தை அமைக்க திட்டமிட்டு அதற் கான பணிகள் மேற்கொள் ளப்பட்டு வருகிறது. புதிய பஸ் நிலையம் அமைக்கப் படும்போது வடசேரி கனக மூலம் சந்தையை மாற்றவும் முடிவு செய்துள்ளனர். இது கண்டிக்கத்தக்கது சந்தையை புதிதாக எந்த இடத்தில் அமைக்கலாம் என்பது குறித்தும் அதிகாரி கள் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள்.இது கண் துடைப்பு இந்த நிலையில் சந்தையை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு வியாபாரிகள் எங்கள் அமைப்பினரும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறோம். வடசேரி பஸ் ஸ்டாண்ட் கட்டுவதற்கு நிறைய இடங்கள் இருந்த போதிலும் மேயர் மகேஷ் அவர்கள் இந்த மார்க்கெட்டை இடிப்பதற்கு ஆர்வம் காட்டி வருவது ஏதோ உள்நோக்கம் உள்ளது என தெரிய வருகிறது. அப்படி எடுத்தால் மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம் மாநில முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.



இது சம்பந்தமாக மனித உரிமைகள் மீட்பு பத்திரிக்கை உதவி ஆசிரியர் Dr. S. முகம்மது அலி அவர்களிடம் கேட்டபோது

தற்போது சூழ்நிலையில் காய்கறிகள் அதிக உயர்வு ஏற்பட்டு உதாரணமாக தக்காளி விலை கிலோ 150 ரூபாய்க்கு மேல் அதிகரிப்பது போன்ற இதர காய்கறி விளையும் கூடியிருப்பதின் காரணமாக வடசேரி மார்க்கெட்டில் வியாபாரிகள் பொதுமக்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல் விற்பனை விலையை கட்டுப்படுத்தி விட்டு வந்தார்கள் ஆனால் வடசேரி காய்கறி சந்தையை இடித்து விட்டால் எதிர்காலத்தில் இதுபோன்று காய்கறி விலை ஏற்றத்தை கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும் என்றும் வருத்தப்பட்டார்.

*தற்போது வியாபாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் மிகவும் பயனுடையதாக உள்ள இந்த கனகமூலம் சந்தை உள்ள இடத்தை தமிழ்நாடு மானிய கோரிக்கை படி 55 கோடிகள் நிதி ஒதுக்கப்பட்ட நிலையில் புதிய ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் கட்ட திட்டமிடுகிறார்கள்.*

*புதிய ஒருங்கிணைத்த பேருந்து நிலையம் கட்ட மாற்றுவழிகள் உள்ள நிலையில் மக்களுக்கு மிகவும் பயன்படகூடிய நிலையிலுள்ள இந்த குறிப்பிட்ட சந்தை உள்ள இடத்தை குறிவைப்பது பல சந்தேகங்களை கிளப்பியுள்ளது.*

*இதில் தனிபட்ட முறையில் பயனடைவது யார் என்பது மக்களுக்கு தெரிந்திருந்தும் அரசு எந்திரத்துக்கு முன் நிர்கதியாய் நிர்க்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளனர்.*

*இதனால் முழுக்க முழுக்க பாதிக்கப்படுவது பொதுமக்களும் வியாபாரிகளும்தான் என்பது எந்தவித சந்தேகமும் இல்லை.*



நாகர்கோவில் வடசேரி காய்கறி சந்தையில் மேயர் மகேஷ் அதிரடியாக புகுந்து வியாபாரிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

நாகர்கோவில் வடசேரி பகுதியில் கனகமூலம் காய் கனி சந்தை உள்ளது. இங்கிருந்து காய் மற்றும் பழவகைகள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடந்த 100 ஆண்டுகளுக்கு முன்பு திருவிதாங்கூர் கனகமூலம் மகாராஜாவால், காய்கள் மற்றும் பழங்கள் இங்கு கொள்முதல் செய்யப்பட்டு கேரளாவிற்கு கொண்டு செல்வதற்காக இந்த சந்தை உருவாக்கப்பட்டது.

ஆய்வின்போது ஆணையாளர் ஆனந்த மோகன், என்ஜினீயர் பாலசுப்ரமணியன், மாநகர நல அதிகாரி ராம்குமார், மண்டல தலைவர் ஜவகர், சுகாதார ஆய்வாளர் மாதவன் பிள்ளை, கவுன்சிலர் கலாராணி மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



இது பற்றி நாகர்கோயில் மாநகராட்சி மேயர் மகேஷ் அவரிடம் கேட்டபோது

அப்போது அவர் கூறியதாவது: நாகர்கோவில் வடசேரி பகுதியில் 4ரு ஏக்கரில் ரூ.55 கோடி செலவில் நவீன பஸ் நிலையம் அமைக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. பஸ் நிலையத்தில் வணிக வளாகமும் கட்டப்படுகிறது. இதற்கு விரைவில் டெண்டர் பிறப்பிக்கப்பட உள்ளது. இந்த நிலையில் பஸ் நிலையத்தில் அமைய உள்ள இடத்தை ஆய்வு செய்தோம். பஸ் நிலையம் அமைக்கப் படும்போது அங்குள்ள சந்தையை மாற்ற வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. வியாபாரிகளின் வாழ்வாதா ரம் பாதிக்காத வகையில் சந்தையை மாற்ற ஆய்வு செய்து வருகிறோம். ஏற்கனவே அண்ணா பஸ் நிலையத்தில் ஆய்வு மேற்கொண்ட நிலையில் பூ மாலை மார்க்கெட்டின் பின்புற பகுதி மற்றும் உழவர் சந்தை பகுதி ஆய்வு செய்துள்ளோம். உழவர் சந்தை வேளாண் துறை கட்டுப்பாட்டில் உள்ளது. எனவே அதிகாரிகளுடன் ஆலோசித்து நல்ல முடிவு எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

*எனவே தமிழக அரசு இந்த திட்டத்தின் உள் சூட்சுமம் என்னவென்று மீண்டும் முறையாக ஆய்வு செய்து மக்கள் பாதிப்படைவதை தடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்துள்ளது கனகமூலம் சந்தை வியாபரிகள் கூட்டமைப்பு.*

**- நிருபர் H. ஹாஜாமைதீன்**




# ஸ்டெர்லிங் லேப் பிரைவட் லிட் நிறுவனத்தின் அலட்சியம்!



கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர், மூகண்டபள்ளி, சிப்காட்1 என்னுமிடத்திலுள்ள ஸ்டெர்லிங் லேப் பிரைவட் லிட். என்ற நிறுவனத்தில் B.N.பிரகாஷ் என்பவர் வேலை செய்துவந்தார்.

ஒரு முகாந்திரமும் இல்லாமல் பழிவாங்கும் நோக்கில் அந்த நிறுவனம் அவரை பணியிலிருந்து நீக்கிவிட்டது இதனால் வாழ்வாதாரம் இழந்து அவரும் அவரது குடும்பமும் எப்படியெல்லாம் பாதிக்கப்பட்டார்கள் என்பது குறித்து அவரிடம் கேட்டபோது,

நான் கடந்த 12 வருடங்களாக அந்த நிறுவனத்தில் நிரந்தர தொழிலாளியாக வேலை செய்துவந்தேன். இந்நிலையில் அந்நிறுவனம் 2018. செப்டம்பர் மாதம் என்னை உள்நோக்கத்தோடு வேண்டுமென்றே பழிவாங்கும் நோக்கில் வேலையிலிருந்து நீக்கினார்கள்.

இது சம்பந்தமாக ஒசூரிலுள்ள லேபர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து நடைபெற்று வந்தது.

பின்பு இவ்வழக்கின் தீர்ப்பு வெளியானது.



பாதிக்கப்பட்ட நபர் B.N.பிரகாஷ்.

அத்தீர்ப்பில் வழக்கு நடந்த காலத்தில் முழு ஊதியம் தரவேண்டுமெனவும் என்னை மீண்டும் பணி நியமனம் செய்ய வேண்டுமெனவும் எனக்கு சாதகமாக தீர்ப்பானது.

ஆனால் இதுநாள்வரை ஸ்டெர்லிங் லேப் பிரைவட்.லிட் நிறுவனம் இந்த நீதிமன்ற தீர்ப்பினை நடைமுறைபடுத்தவில்லை, பலமுறை இதுசம்பந்தமாக நேரில் முறையிட்டும் எந்த பயனும் இல்லை என தெரிவித்தார்.

நீதிமன்ற தீர்ப்பு வந்து இவ்வளவு நாட்கள் ஆகியும் ஒரு சாமானியனுக்கு நீதி மறுக்கப்படுவதால் சட்டம் என்பது தேவைப்படும் போது மறுக்கப்படுவதும் செத்து மடிந்த பின் கிடைப்பதால் என்ன பயன் என்பது கேள்விக்குறியான ஒன்றுதான்.

B.N.பிரகாஷுக்கு நீதி வழங்ககோரி மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தினர் ஸ்டெர்லிங் லேப் பிரைவட் லிட் நிறுவனம் எதிரில் மாபெரும் உண்ணாவிரத போராட்டம் நடைபெற இருப்பதாக அறிவித்துள்ளது குறிப்பிடதக்கது.

- செய்தி ஆசிரியர் புதுவை S. செல்வமணி

**Owned and Published by M.ABDUL RAHMAN from No.61, Venkata Mesthiri Street, Mannadi, Chennai-600 001 and Printed S.ALI MOHAMED SAYEED by J.M.PROCESS, at 22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-600 014. Editor: K.MADHUSUDHANAN**








# மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம் மற்றும் மனித உரிமைகள் மீட்பு சார்பாக இலவச தலைக்கவசம் வழங்கப்பட்டது...

**கடந்த 15.07.2023 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு தக்கலை பேருந்து நிலையத்தில் இருக்கும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவ சிலையில் மாலை அணிவித்து பிறந்தநாளை மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம் சார்பாக கொண்டாடினார்கள்.**

இவ்விழாவின் போது பெருந்தலைவர் காமராசரின் மக்கள் சேவைகளைப் பாராட்டுதல் இருசக்கர வாகனத்தில் தலைக்கவசம் அணியாமல் பயணம் செய்கின்ற ஒட்டுநர்களுக்கு இலவச தலைக்கவசம் வழங்குதல் சிறப்பாக பணியாற்றும் காவல்துறை அலுவலர்களை பாராட்டி கௌரவித்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன. அன்று காலை 10.00 மணிக்கு திரு.Dr.P.முருகேசன் (அகில இந்திய துணைச்செயலாளர்) விழா தலைவராக பொறுப்பேற்று பேசினார்.

திரு.Dr.S.முகம்மது அலி (மாநில தலைமை துணை செயலாளர்) மற்றும் திரு.R.சாம் எட்வர்ட் (மாநில தலைமை துணை செயலாளர்) ஆகியோர் முன்னிலை வகித்தனர். வரவேற்புரையாற்றியர் திரு.M.செய்யது மீர் காசிம் (மாவட்ட தலைவர்) பெருந்தலைவர் காமராசர் குறித்து பேருரை நிகழ்த்தியவர் தக்கலை ப.நடராசன்(மாவட்ட துணை தலைவர்) அவர்கள், இலவச தலைக்கவசம் R.N.K.அபூசாலிஹ் M.F.B.A.U (கன்னியாகுமரி மாவட்ட அரசு தலைமை காஜி), திரு.ராமசந்திரன்(தக்கலை காவல் ஆய்வாளர்), திரு. V.செந்தில் குமார் (ஆய்வாளர் தக்கலை போக்குவரத்து பிரிவு), திருமதி. ஆஷா ஜெபாகர்(துணை ஆய்வாளர் தக்கலை) ஆகியோர் வழங்கினர். வாழ்த்துரை வழங்கியவர்கள் திரு.G. அருள்சோபன் (தலைவர் பத்மநாபபுரம் நகர்மன்றம்), திரு.Dr. ஜெரூஷ் பிளாட்பின் (ஜெரூஷ் மருத்துவமனை) மற்றும் திருமதி. H.சுலைகா பேகம் (M.C. நகர துணைச் செயலாளர்). முடிவில் திரு.C.பிரபாத் சிங் (மாவட்ட செயலாளர்) நன்றியுரை ஆற்றினார்.

- பொறுப்பு இணை ஆசிரியர் R. ஷாம் எட்வர்ட்

MANITHA URIMAIGAL MEETPU Tamil Fortnightly, November 1-15-2018
Regd. with the Registrar of News Papers for India under No. TNTAM / 2017 / 74330 / R.Dis.481 / 17



# காவியமானவளே..!

பெண்ணே
நீ என்ன
அப்ஸரசின்
அன்பு
மகளா?
அறுதியிடும்
கடல்
அலையா?
குளிர்ந்து விட்ட
நிலவொளியா?
தழுவுகின்ற
தணலா
மலைமுகட்டின்
முகிலா?
சாரல்
பெய்த
பனிமழையா?

ஆயிரம் முறை
ஆராய்ந்துதான்
பார்க்கிறேன்...
ஆனாலும்
இன்று வரை
அறியவில்லை...
உன் உள்
மனதின்
ஓசையினை...

உன்
விழிகளின்
வீச்சில் தான் எத்தனை
கவிதை
அதை
வாசிப்பதற்க்குள்
வழுக்கி விழுகிறேன்...
உன்
நாசி வழியே
பிரம்மன்
வரைந்த
உன்
செப்புதட்டின்
யாழ் இசையில்...

தேன்
தடவிய
உன் குரலிசையில்
சொக்கி நின்ற
பொழுதுகள்
வெறும்
முப்பது வருடங்கள்
கூட
மூன்று
நொடிகளாய்
நொறுங்கி தான்
போனதடி
என்
கண்ணே...

கணவில் தோன்றிய
கஜுராஹோ
சிற்பமும்
தூரிகையில்
துயிலும்
அஜந்தாவின்
ஓவியமும்
ஒன்றாக
பிசைந்தது போல்
ஒயிலாக
நடை பழக
பூமிக்கு
வந்தவளே...
என்
யாப்பில்லா
இலக்கணமே
மூப்பில்லா
முத்தமிழே...
என்
சுவைமிகுந்த
முக்கனியே
இளையவளே
என் இனியவளே...

பாலைவன
நிலவொளி
போல்
பளிங்கு
மனம்
படைத்தவளே
கருணை கூட
கடலாக
தன்னகத்தே
கொண்டவளே...

உன் நினைவும்
கூட மயிலிறகாய்
மனதினுள்ளே
வருடும் போது
வண்ணமயமாய்
மின்னுகிற
உன் எண்ணங்கள்
என்னுள்ளே
வானவில்லாய்
வளைகிறதே
என் உயிரே
என் கண்மணியே...

இறுதியாக
மறுமுறையும்
உன்
கருவறையில்
குழந்தையை போல்
ஒளிந்துகொள்ள
தோன்றுதடி
உன்
உதிரத்தின்
பாதியாக
இந்த
உலகையே
ஒரு கணம்
மறந்து.....



K. மதுசூதனன்
மாநிலத் தலைவர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்